


# 28.08.2026 செய்திகள்

## பெரு வெள்ளம் ஏற்பட்டது எப்படி?

- சீன நேபாள எல்லையில் இமயமலையின் லாங்டாங் லிருங் சிகரம் அமைந்துள்ளது. சுமார் 8,000 மீட்டர் உயரத்தில் உள்ள இந்த சிகரத்தில் பனிப்பாறைகள் உடைந்தன.
- இதனால் சிகரத்துக்கு உள்ளேயே மிகப்பெரிய ஏரி உருவாகி இருந்தது. இந்த சூழலில் லாங்டாங் லிருங் சிகரத்தில் 2,000 அடி அகலம் கொண்ட பிரம்மாண்ட பனிமலை உடைந்து ஏரியில் விழுந்தது.
- இதன் காரணமாக ஏரி உடைந்து திபெத் பகுதியின் போயகு நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இது போன்ற பெருவெள்ளம் பனிமலை ஏரி வெடிப்பு வெள்ளம் (ஜிஎல்ஒப்) என்றழைக்கப்படுகிறது.
- திபெத்தின் போய்கு நதி நேபாளத்தில் போடே கோசி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. திபெத்தில் இருந்து சீறிப் பாய்ந்த வெள்ளம் நேபாளத்தின் போடே கோசி, திரிசூலி, நாராயணி நதிகளில் பெருக்கெடுத்து ஓடியது.
- இதனால் கடந்த புதன்கிழமை காலை நேபாளத்தில் ரசுவா, நுவாகோட் மாவட்டங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கின.
- நேபாளத்தின் நேத்ராவதி – ரசுவாகதி இடையிலான 42 கி.மீ. நீள சாலை, சியோப்ருபேசியில் உள்ள 16 கி.மீ, நீள சாலை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சுமார் 6 மணி நேரத்துக்கும் மேலாக நேபாள நதிகளில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் பாய்ந்ததால் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.
- இமயமலைப் பகுதியில் 4.4 ரிக்டர் அலகில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பனிமலைகள் உடைந்து நேபாளத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக கருதப்பட்டது.
- ஆனால் தீவிர ஆய்வில் அங்கு நிலநடுக்கம் ஏற்படவில்லை. பனிமலை உடைந்தே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

SURESH'

## நேபாள வெள்ளம் : பனிமலை ஏரி வெடிப்பு காரணமா?

- 2026 ஆகஸ்ட் 26 அன்று காலை நேபாளத்தின் சீன எல்லைப்பகுதியில் உள்ள போட்டேகோஷி, திரிசூலி ஆற்றுப் பள்ளத்தாக்கில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய வெள்ளம் திடீரெனப் பாய்ந்தது.
- இதில் ரசுவா, நுபாகோட் மாவட்டங்களின் கிராமங்கள், சாலைகள், பாலங்கள், நீர்மின் நிலையங்கள் அடித்துச் செல் லப்பட்டன.

» எப்படி நிகழ்கிறது?

- உயர்மலைப் பகுதிகளில் பனிப்பாறைகள் உருகும்போது, அந்த நீர் பனி அல்லது கற்கள், மண் அடங்கிய இயற்கையான அணை ஒன்றின் பின்னால் தேங்கி ஒரு ஏரியாக உருவாகிறது. இது பனிமலை ஏரி எனப்படுகிறது.
- இந்த இயற்கை அணைகள் ஓர் அமைப்பாகவே நிலையற்றவை. ஏனெனில், அவை உறுதியான பாறையால் அல்ல ; தளர்வான பனி, மண் துகள்களால் ஆனவை. இந்த அணை திடீரென உடையும்போது ஏற்படுவதே பனிமலை ஏரி வெடிப்பு வெள்ளம்.

- இந்த உடைவைப் பல காரணிகள் தூண்டலாம். ஏரிக்குள் பனிப்பாறை உடைந்து விழுதல், நிலநடுக்கம், அதிக மழைப்பொழிவு அல்லது காலப்போக்கில் அணையின் சுவர் மெல்ல மெல்ல பலவீனமடைதல், சில நேரம் மேலே உள்ள பனிப்பாறையே பெரிய அளவில் உடைந்து விழுவதால், ஏரி இல்லாமலேயே இதே அளவிலான வெள்ளம் ஏற்படக்கூடும்.
- முக்கியமான பாடம்
- பனிமலை ஏரி வெடிப்பு வெள்ளம் என்பது இமயமலைத் தொடர் முழுவதும் பரவியுள்ள ஒரு பொதுவான இயற்கை நிகழ்வு.
- நேபாளம், இந்தியா (குறிப்பாக லடாக், இமாசலப்பிரதேசம், சிக்கிம், உத்தராகாண்ட் போன்ற பகுதிகள்), பூட்டான், பாகிஸ்தான் திபெத் உள்பட சீனாவின் மேற்குப் பகுதிகள் ஆகிய அனைத்து இமயமலை நாடுகளிலும் இது தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.
- உலக வெப்பநிலை உயர்வு காரணமாகப் பனிப்பாறைகள் தொடர்ந்து உருகிப் பின்வாங்குவதால், கடந்த சில பத்தாண்டுகளில் இந்தப் பகுதிகளில் புதிய பனிமலை ஏரிகளின் எண்ணிக்கையும் அளவும் கணிசமாக அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.
- நேபாளத்தில் இப்படியான நிகழ்வுகள் புதிதல்ல. 2024 ஆகஸ்ட் மாதத்தில் எவரெஸ்ட் பகுதியில் உள்ள தாமே கிராமத்துக்கு மேலே இரண்டு பனிமலை ஏரிகள் உடைந்து வீடுகளையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் சேதப்படுத்தின.
- 2025 மே மாதத்தில், தொலைதூர டில்காவ் (ஹூம்லா) பகுதியில் திடீர் ஏரி வெடிப்பு பாலங்களை அழித்து, கிராமவாசிகள் 32 பேரை இடம்பெயர வைத்தது. அதுவும் மழையே இல்லாத நிலையில் நிகழ்ந்தது.
- இது பனிப்பாறை நிலையின்மையே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

SURESH'